# ஊடக அறிக்கை

**ஐக்கிய நாடுகள் மற்றும் கல்வி அமைச்சு இணைந்து SDG செயற்றிட்டத்தை ஆரம்பிக்கின்றன**

**24, ஒக்டோபர் 2017: கொழும்பு:** ஐக்கிய நாடுகள் சபையும், கல்வி அமைச்சும், ஹட்டன் நஷனல் வங்கியும் இணைந்து **"SDG** செயற் திட்டம் " எனும் திட்டத்தினை கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அறிவித்தன.

2015இல், புதிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் ஒன்றின் அங்கமாக வறுமையை ஒழிப்பதற்கு, பூமியை காப்பதற்கு மற்றும் அனைவருக்கும் செழிப்பினை உறுதி செய்வதற்கு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (உலகளாவிய இலக்குகள் என பொதுவாக அறியப்படுகின்றன) நாடுகள் உள்வாங்கின. ஒவ்வொரு இலக்கும் 2030இல் எட்டப்படுவதற்கான குறிப்பிட்ட அடைவுகளை கொண்டிருக்கின்றது.

இலக்குகள் எட்டப்படுவதற்கு, அரசாங்கங்கள், தனியார் துறை, சிவில் சமூகம் மற்றும் மக்கள் என ஒவ்வொருவரும் தமது பங்கினை சரிவர ஆற்ற வேண்டும்.

இந்த வருடத்தில், 72ஆவது ஐ.நா தினக் கொண்டாட்டத்தில், இலங்கையில் ஐக்கிய நாடுகள் அலுவலகமும், கல்வி அமைச்சும் ஹட்டன் நஷனல் வங்கி மற்றும் ரோர் மீடியாவின் பங்களிப்புடன் **SDG** சார் திட்டங்களை தங்களது சமூகத்தில் வடிவமைத்து அமுல்படுத்துவதற்காக மாணவர்களை ஊக்குவிக்கும் **'SDG** செயற்றிட்டத்தை**'** ஆரம்பிக்கின்றன.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த, இலங்கை அரசாங்கத்தின் கல்வி அமைச்சர், கௌரவ அகில விராஜ் காரியவசம் அவர்கள், "ஏனைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் எட்டப்படுவதற்கு பிரதானமானதாக கல்வி உள்ளது. நாடு வளர்ச்சி அடைவதற்கு உதவுவதற்கு இலங்கை இளைஞர்களை இந்த பிரசாரமானது கற்பித்து**,** வலுப்படுத்தும்" எனக் குறிப்பிட்டார்.

2030 அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை அடைவதற்கான இளைஞர்களின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய, இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பணிப்பாளரும், யு.என்.டீ.பி வதிவிட பிரதிநிதியுமான திருமிகு. உனா மெக்கோலே அவர்கள், "2030ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நாம் அடைய வேண்டுமாயின், இலங்கை இளைஞர்களை நிலைபேறான அபிவிருத்தித் தலைவர்களாக நாம் ஈடுபடுத்த வேண்டியது அவசியமாகும்" எனத் தெரிவித்தார்.

SDGகள் பற்றி மாணவர்களுக்கு தெரியப்படுத்தல் , செயற்றிட்டப் பிரேரணைகளைக் கோருதல் மற்றும் நாடு முழுதும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 25 பாடசாலைச் செயற்றிட்டங்களுக்கு முதலீட்டுப்பணமும் வழிகாட்டலும் வழங்குவதன் மூலம் இலங்கையில் SDG இனை எட்டும் நோக்கிலான மாணவர்கள் தலைமையிலான நிகழ்ச்சிகளுக்கு இந்த பிரசாரம் ஆதரவளிக்கும்.

இந்த பிரசாரத்திற்கான பங்காளித்துவம் மற்றும் நிதியிடல் குறித்து கருத்து தெரிவித்த, ஹட்டன் நஷனல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி, திரு டில்ஷான் ரொட்ரிகோ அவர்கள், "" கடந்த காலங்களில் **HNB** ஆனது சிறுவர்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதில் முக்கிய பங்காற்றியிருக்கிறது. நாடு முழுதும் கிட்டத்தட்ட 200 பாடசாலை வங்கிப்பிரிவுகள் **HNB**க்கு உண்டு. இது வங்கிகளின் பாவனையை அதிகரித்தல், கிராமியப் பொருளாதாரத்தை விருத்தி செய்தல், வரி செலுத்தப்படாத பணப்பாவனையை குறைத்தல் ஆகிய தேசிய இலக்குகளுக்கு அமைவாக செயற்படுகிறது. **UN** இன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் ஒன்றான டிஜிட்டல் வங்கி, பேப்பர் பாவனையில்லாத அலுவலகம், பசுமை கட்டடங்கள் போன்றவற்றை அமுல்படுத்துவதில் நாங்கள் முன்னணியில் திகழ்கிறோம். வங்கிப் பங்காளராக இந்த செயற்றிட்டத்தில் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். "எனக் குறிப்பிட்டார்.

இந்த செயற்றிட்டமானது இலங்கை இளைஞர்களை **SDG**க்காக பணியாற்றவும் அதன் மூலம் தாம் சார் சமூகங்களோடு இணைந்து செயற்பட்டு எங்கள் எதிர்காலத்தை கட்டியெழுப்பவும், **SDG**களை அடையவும் செழிப்பான மக்கள் மற்றும் சுபீட்சமான இலங்கையை உருவாக்க உதவும்.

**மேலதிக தகவலுக்கு:**

வதிவிடப்பிரதிநிதி அலுவலகம்/ UNDP தொடர்பாடல் பிரிவு

0112580691 Ext. 1500, 0774448401 | info.lk@one.un.org | www.lk.one.un.org | @UNSriLanka